# குறும்படத்திற்கான திரைக்கதை, குறும்படம், ஆவணப்படம், புகைப்படம் மற்றும் ஓவியப் போட்டி

**சர்வதேச மகளிர் தினம் - 2024**



## கருப்பொருள் :

***“பெண்களின் பொருளாதார வலுவூட்டலானது பாலின சமத்துவ உலகின் மையமாகும் - வருமானமீட்டுவதற்கும், கற்றுக்கொள்வதற்கும், வழிநடத்துவதற்கும் பெண்களுக்கு சம வாய்ப்புகள் அளிக்கப்படும் போது ஒட்டுமொத்த சமூகமும் செழிக்கும் ”***

## போட்டி :

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சினால் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொண்டாடப்படவுள்ள சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டவர்களிடமிருந்து குறும்படத்திற்கான திரைக்கதை, குறும்படம், ஆவணப்படம், புகைப்படம் மற்றும் ஓவியத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நுழைவுக்கான விதிமுறைகள், விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்வதற்கும், விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கும் மற்றும் மேலதிக தொடர்புகளுக்கும்:

செயலாளர், மகளிர் விவகார அமைச்சு, வ.மா.ச,

இல. 04, புரூடி லேன், புங்கன்குளம் சந்தி, அரியாலை, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல்: npminwa@gmail.com

தொலைபேசி இலக்கம்: 021 222 0884, 021 222 0883

**விண்ணப்ப தலைப்பு** : கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும்.

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சினால் நடாத்தப்படும் சர்வதேச மகளிர் தினம் 2024 ஆம் ஆண்டிற்கான குறும்படத்திற்கான திரைக்கதை, குறும்படம், ஆவணப்படம், புகைப்படம் மற்றும் ஓவியப் போட்டிகளில் நடுவர்களால் தெரிவு செய்யப்படும் 1ம், 2ம், 3ம் இடம்பெறுபவர்கள் கௌரவிக்கப்படுவதுடன் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை https://np.gov.lk/ எனும் இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

*மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூகசேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தகமும் வாணிபமும் அமைச்சு, வடக்கு மாகாணசபை*

**தொ. இல : 021 222 0884, 021 222 0883**